Dina Malar, Agust 27, 2011

# குவிஸ்: ஊட்டி முதலிடம்; கோவை இரண்டாமிடம்

**கோவை, ஆக. 26 -**

டாடா கன்சல்டன்சி சர்வீஸ்(டி.சி.எஸ்.) நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் டி.சி.எஸ்., ஐ.டி., வினாடி, வினா போட்டி ஆர்.எஸ்., புரம் மாநகராட்சி கலையரங்கில் நேற்று நடந்தது.

கடந்த 12 ஆண்டுகளாக நடத்தப்படும் இப்போட்டி, தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு நடத்தப்படுகிறது. 85க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 1,200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

இறுதிப்போட்டியில், கோவை ஸ்டேன்ஸ் பள்ளி மாணவர்கள் ஸ்ரீராம், சந்தோஸ், அங்கப்பா பள்ளி பிரபாகரன், சந்தோஷ் குமார், குன்னூர் ஸ்டேன்ஸ் பள்ளி ரெவன்த் நோயல், ஐஸ்வர்யா, ஊட்டி தி லெய்ட்லா நினைவு பள்ளி ஹரிஹரசுதன், மணிகன்டன், மேட்டுப்பாளையம் சச்சிதானந்த ஜோதி நிகேடன் பள்ளி அக்சய குமார், மிதுன், கோவை ஜி.டி., மெட்ரிக் பள்ளி நந்தகிஷோர், வித்யபிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஐந்து சுற்றுகளாக நடந்த இறுதிப்போட்டியில், எக்ஸ்பீரியன்ஸ் ஆன்டிசிபேஷன் சுற்றில் ஐ.டி., உலகம் குறித்த அறிவாற்றல் கேள்விகளும், எக்ஸ்பீரியன்ஸ் டைவர்சிட்டி சுற்றில் தகவல் தொழில்நுட்பம் பற்றி தலைப்புகளும், அட் டி.சி.எஸ்., சுற்றில் நிறுவனம் குறித்தும், எக்ஸ்பீரியன்ஸ் ஒன்னெஸ் சுற்றில் பார்வைக்கு அப்பார்பட்ட கேள்வியும், எக்ஸ்பீரியன்ஸ் அச்சீவ்மென்ட் சுற்றில் நேர வரையறையுடன் கூடிய புதிர் கேள்விகளும் கேட்கப்பட்டன.

முதல் சுற்று மற்றும் அதை தொடர்ந்து விறுவிறுப்பான இறுதி சுற்றின் நிறைவில், ஊட்டி தி லெய்ட்லா நினைவு பள்ளி மாணவர்கள் ஹரிஹரசுதன், மணிகன்டன் ஆகியோர் முதல்பரிசாக கேலக்சி டேப்ளட், டிஜிட்டல் கேமரா மற்றும் வெற்றிக் கோப்பையை தட்டிச் சென்றனர்.

இரண்டாம் பரிசாக கோவை ஜி.டி., மெட்ரிக் பள்ளி மாணவர்கள் நந்தகிஷோர், வித்யபிரசாத் ஆகியோர் ஐபாட் டச் மற்றும் கோப்பையை பெற்றனர்.

இறுதி சுற்றுக்கு சென்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்களுக்கு, எல்.எம்.டபிள்யு., நிர்வாக இயக்குனர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, ஐ.ஓ.என்., மற்றும் டி.சி.எஸ்., குளோபல் தலைவர் ராமசாமி ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.